**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093874

1. District : விருதுநகர் PS: ஊ.த.க. பிரிவு விருதுநகர் Year: 2022 FIR No.: 2/2022 Date: 28-2-2022
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of Prevention of
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: corruption (Ammendment
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12-2-2022 Date from : நாள் முதல் 26-2-2022 13.15 மணி Date to : நாள் வரை
Time Period : நேர அளவு மாலை Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28-02-2022 Time : நேரம் 12.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உமாபட்டி காவல் நிலையம் 51 km மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கு. கண்ணன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் குருசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் நிலத்தரகர்
(g) Address : முகவரி வார்டு எண் -2 கதவு எண் 5/1 மேலத்தெரு, ராமசாமியாபுரம் வத்திராயிருப்பு தாலுகா. விருதுநகர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ராம்குமார், உதவி ஆய்வாளர், உமாபட்டி காவல்நிலையம் விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— இல்லை —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது: நான் இன்று 28.2.22ம் தேதி மதியம் 12.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு தாலுகா ராமசாமியாபுரம் மேலத்தெரு கதவு எண் 5/1 வார்டு எண்-2 என்ற முகவரியை சேர்ந்த திரு.குருசாமி என்பவரின் மகன் திரு.கண்ணன் 51/2022 என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த வாக்குமூலத்தை மதியம் 12.45 மணிக்கு பதிவு செய்து அவரிடம் படித்து காண்பித்து, அந்த புகார் வாக்குமூலத்தை பிரிண்ட் எடுத்து அதில் மனுதாரரிடம் கையொப்பம் பெற்று மேற்படி புகார் வாக்குமூலம் மீது இரகசிய விசாரணை செய்ததில் எதிர் மனுதாரர் மீது மையமான குறிப்புகள் இருந்தாலும் வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்தாலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்து (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கு. கண்ணன் 28.02.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 28.2.22
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
Inspector of Police, V&AC, VNR.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28-2-22/16.30 hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police
V&AC, Virudhunagar

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண். 02/2022 பிரிவு 7 of PC (Amendment) Act 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

இன்று 28.02.2022 தேதி 14.00 மணிக்கு விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.02/2022 பிரிவு 7 of PC (Amendment) Act 2018 ஆக திரு.ராம்குமார், உதவி ஆய்வாளர், கூமாப்பட்டி காவல்நிலையம், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் பின்வருமாறு: திரு.கண்ணன், வயது 51/2022, த/பெ.குருசாமி, வார்டு எண்-2, கதவு எண்.5/1, மேலத்தெரு, ராமசாமியாபுரம், வத்திராயிருப்பு தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் இன்று (28.02.2022) மதியம் 12.00 மணியளவில் என்முன் ஆஜராகி சொன்ன புகார் வாக்குமூலம் நான் வத்திராயிருப்பு தாலுகா, ராமசாமியாபுரத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடத் தெரியும். சுமார் 35 வருடங்களாக நான் நிலத்தரகு வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன். எனது மனைவி கடந்த 1993ஆம் ஆண்டு புற்று நோயால் பாதிப்படைந்து இயற்கை எய்து விட்டார். எனக்கு இரண்டு மகன்கள் மூன்று மகள்கள் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் செய்து கொடுத்து விட்டேன். நான் தனியாகத் தான் இருந்து வருகிறேன். எனது மகள் கோசலை உள்ளூரிலேயே இருப்பதால் அவ்வப்போது அவர் என்னை பார்த்துக்கொள்வார். எனது ஊரைச்சேர்ந்த கீழத்தெருவில் வசிக்கும், திரு.அழகுமலை மகன் திரு.ராமராஜ் (எ) மொசல் மாடு மேய்க்கும் தொழில் செய்து வந்தார். அவர், அவரது மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனியாகத்தான் இருந்து வருகிறார். இந்நிலையில் அவர், கடந்த 09.11.2021ஆம் தேதியன்று நண்பகல் சுமார் 12.00 மணியளவில் என்னிடம் வந்து, ஏதாவது வேலையில் சேர்த்துவிடு என்று கேட்டார். ஆகையால் நான், அவரை சிவகாசி அருகில் மத்தியசேனையில் எனக்கு தெரிந்த திரு.கண்ணன் என்பவரின் மாட்டுபண்ணையில் வேலைக்கு சேர்த்து விட்டேன். இந்நிலையில் மேற்படி திரு.ராமராஜ் (எ) மொசலை காணவில்லை என்று அவருடைய போட்டோவுடன் சில விவரங்களை குறிப்பிட்டு அச்சிடப்பட்ட நோட்டீஸ் கூமாப்பட்டி காவல்துறையினரால் என்னுடைய ஊர் சுற்றுவட்டார பகுதிகளில் ஆங்காங்கே ஒட்டபட்டிருந்ததை கடந்த 12.02.2022ஆம் தேதியன்று கண்டேன். ஆகையால் நான் அன்று (12.02.2022) மேற்படி திரு.ராமராஜ் மாமா திரு.காளியப்பன் மற்றும் திரு.ராமராஜ் மருமகன் திரு.ராஜசேகர் ஆகியோரிடம், மேற்படி ராமராஜை வேலைக்கு சேர்த்து விட்ட விபரத்தை தெரிவித்து, அவர்களை ராமராஜ் இருக்கும் இடத்திற்கு அன்றே நண்பகல் சுமார் 01.00 மணியளவில் அழைத்து சென்று ராமராஜை காண்பித்து, அவரை உடனே நண்பகல் சுமார் 01.30 மணியளவில் கூமாப்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விபரத்தை கூறி கூமாப்பட்டி காவல்

நிலையத்தில் இருந்த உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார் அவர்களிடம் ஒப்படைத்தேன். பின்னர் உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார், அவருடைய உறவினர்களிடம் எழுதி வாங்கி கொண்டு மேற்படி திரு.ராமராஜை அவர்களுடன் அன்றே (12.02.2022) மாலை அனுப்பி வைத்தார். அதன்பிறகு உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார் என்னை தனியாக அழைத்து, நான் வைத்திருந்த என்னுடைய ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, ATM கார்டு, பான் கார்டு மற்றும் எனது இருசக்கர வாகன RC புத்தகம் ஆகியவைகளின் அசல்கள், எனது பட்டன் மாடல் கைபேசி (எண்.76398-41110) மற்றும் அதனோடு இருந்த சார்ஜர், சில விபரங்கள் எழுதி வைத்திருந்த டைரி ஆகியவற்றை வாங்கி வைத்துக்கொண்டு, நீ ராமராஜை கடத்தி கொண்டு போய் வைத்திருந்ததாக உன்மீது கேஸ் போடுவேன், உன்மீது கேஸ் போட்டால் நீ வக்கீலுக்கு பணம் 20,000/-தரனும், கோர்ட்டுக்கு அலையனும், அதனால் எனக்கு நீ தனியா 10,000/- ரூபாய் பணத்தை கொண்டுவந்து கொடுத்துவிட்டு, இந்த பொருட்களையெல்லாம் வாங்கிட்டு போ என்றும் கூறினார். அதற்கு நான் அவரிடம் சார் என்மீது ஏன் கேஸ் போடுகிறீர்கள் நான் என்ன செய்தேன் சார், ராமராஜ் என்னிடம், தன்னை வேலையில் சேர்த்துவிடும்படி சொன்னதால்தான் நான் அவரை வேலைக்கு சேர்த்து விட்டேன் சார், மற்றபடி நான் எந்த தப்பும் செய்யவில்லையே சார், நான் எந்த வம்புக்கும் போர ஆள் கிடையாது சார் என்று சொன்னேன். அதற்கு அவர் அதலாம் எனக்கு தெரியாது. நான் சொன்னபடி நீ பணம் 10,000/-த்தை ரெடி பண்ணி கொண்டு வரவேண்டும், இல்லையென்றால் நீ கோர்ட்டு கேஸ் என்று அழையவேண்டி வரும், உன்னையும் நிம்மதியா வாழ விடமாட்டேன் என்றும் கண்டிப்புடன் கூறி என்னை அனுப்பிவைத்தார். அதன்பிறகு நான், மேற்படி எனது பொருட்களை வாங்குவதற்கு கூமாபட்டி காவல் நிலையத்திற்கு பலநாட்கள் சென்று உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார் அவர்களை சந்தித்து கேட்டேன். கேட்கும்போதெல்லாம் மேற்படி உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார் அவர்கள் என்னிடம், நான் கேட்ட பணம் ரூ.10,000/- கொண்டுவந்திருக்கியா என்றும், பணம் ரூ.10,000/-த்தை ரெடிபண்ணி கையில் வச்சுக்கிட்டு என்னை வந்து பார் என்றும், அதில்லாமல் என்னை வந்து பார்க்காத, என் மூஞ்சியிலயே முழிக்காத என்றும், அப்படி அந்த பணமில்லாமல் திரும்பவும் என்னை வந்து சந்தித்தைனா ஜெயிலுக்கு போறதுக்கு ரெடியாயிட்டு வா என்றும் கூறி, அனுப்பிவைத்தார். அதன்பிறகு கடந்த 26.02.2022ஆம் தேதி நண்பகல் சுமார் 1.15 மணியளவில் கூமாபட்டி காவல்நிலையம் சென்று, உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார் அவர்களை சந்தித்து என்னுடைய பொருட்களை கேட்டேன். அப்போதும் அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.10,000/- என்னாச்சு என்றும், நான்தான் உங்கிட்ட ஏற்கனவே நீ என்னை பலதடவை சந்திச்சபோதெல்லாம் உங்கிட்ட சொல்லியிருக்கேன்லப்பா, பணத்தோட வா, பணத்தை என்னிடம் கொடுத்துட்டு உன்னோட பொருட்களை வாங்கிட்டு போன்னு

சொல்லியிருக்கேன்லப்பா, பிறகு ஏன் சும்மா சும்மா வந்து என்னை பார்த்துகிட்டிருக்க என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், இப்ப நிலத்தரகு தொழில் ரொம்ப மோசமா இருக்கு சார் என்றும், அவ்வளவு பணம் என்னால ரெடிபண்ண முடியாது சார் என்றும், நீங்க பார்த்து பண்ணுங்க சார் என்றும் கூறினேன். அதற்கு உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார் சரி ரூ.3,000/-த்தை குறைச்சிட்டு பணம் 7,000/-த்தையாவது ரெடிபண்ணி கொண்டுட்டு வா என்றும், இதிலேயும் எதுவும் குறைச்சு கேட்காத என்றும், கட்டாயம் ரூ.7,000/-த்தை ரெடிபண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால்தான் உன்னுடைய பொருட்களை உன்னிடம் கொடுப்பேன் என்றும் மிகவும் கண்டிப்புடன் கூறினார். ஆனால் எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. இருந்தாலும் நான் வேறுவழியில்லாமல் அப்போது அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அன்று (26.02.2022) என்னிடம் அவ்வளவு பணம் இல்லாததால், அந்த பணம் ரூ.7,000/-ஐ இன்று (28.02.2022) காலை ரெடிபண்ணி கொண்டு, எந்த தவறும் செய்யாத என்னிடம் என்னுடைய பொருட்களை வாங்கி வைத்துக்கொண்டு, அந்த பொருட்களை திரும்ப என்னிடம் கொடுப்பதற்கு லஞ்சமாக பணம் ரூ.7,000/- கேட்ட கூமாப்பட்டி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.ராம்குமார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். படிக்க கேட்டேன். நான் சொன்னது சரியாக இருந்தது. (Sd) கு.கண்ணன் 28.02.2022 Sir, Recorded by me between 12.00 hrs to 12.45 hrs on 28.02.2022 the genuiness of the complainant was verified through sources and found to be genuine. The intergrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case in warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.2/2022 u/s 7 of PC (Amendment) Act 2018 on 28.2.22 at 14.00 hrs and took up for Investigation. (Sd) N.Bharathi Priya 28.2.22, Inspector of Police, V&AC, VNR.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM/Spl.Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

N. Bharathi Priya 28.2.22
Inspector of Police
V&AC. VNR.